2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

212—

மேம்பாலம்

***51310—டாக்டர் வி.எஸ். விஜய்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவமனைக்கு எதிரில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் தொகுதி, வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனை எதிரில் மேம்பாலம் கட்டும் பணிக்காக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திடமிருந்து தடையின்மைச் சான்று பெறப்பட்டவுடன் பாலம் கட்டும் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய் அவர்கள்.

டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற நாமக்கல் கவிஞரின் கூற்றுப்படி தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே கொண்டு சென்று, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) "மக்களால் நான் மக்களுக்காக நான்" என்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற

வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற் பாதங்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை, இந்தியா மட்டுமல்லாமல், உலகப் புகழ்பெற்ற ஒரு மருத்துவமனை. இங்கே தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல, உலக நாடுகளிலிருந்து மக்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றார்கள். ஆகவே, இங்கே போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. அவசர சிகிச்சைக்காக செல்வதற்கும் கடினமாக இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை அருகே மேம்பாலம் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றாலும்கூட, அந்தப் பணியினைத் துரிதப்படுத்தி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அந்தப் பணியினை முடித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் அந்த மேம்பாலம் திறந்து வைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகரில் உள்ள சி.எம்.சி. மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அருகில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க உயர்மட்ட மேம்பாலம் தேசிய நெடுஞ்சாலை எண் 234-ல் அமைய உள்ளது. இப்பாலத்திற்கான விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டபின் தொடர்ச்சியாக மேம்பாலத்திற்கான நேர்ப்பாடு இறுதி செய்யப்பட்டு, வடிவமைப்பு மற்றும் ஆய்வு முடிந்த நிலையில், பாலத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ளது. இப்பாலம் தேசிய நெடுஞ்சாலை எண் 234-ல் கட்டப்பட வேண்டியுள்ளதால் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் தடையின்மைச் சான்று பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் தடையின்மைச் சான்று கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரத்தில் கிட்டத்தட்ட 4 பாலங்களினுடைய வேலைகள் மிக நீண்ட நாட்களாக நடைபெறுகின்றன. அதிலே அணைப்பாளையம் பாலப் பணி முடியாததால், இரயில்வே மற்றும் ஆற்றுப்பாலம் ஆகிய இரண்டையும் கடக்க வேண்டியுள்ளது. அதேபோல், இரயில்வே சுரங்கப்பாதை-ஊத்துக்குளி ரோடு, இரயில்வே மேம்பாலம்-ஊத்துக்குளி, மண்ணரை நொய்யலாற்றுப் பாலம் ஆகியவற்றில் நீண்ட நாட்களாக வேலை முடியாமல் இருக்கிறது. அதை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கண்ணா கல்லூரி இரயில்வே மேம்பாலப் பணி, திருப்பூர் சோமனூர் சாலையிலிருந்து சிக்கண்ணா கல்லூரி செல்லும் சாலையில் கி.மீ. 1/4-ல் சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கு திருப்பூர் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2006-2007-ல் ரூ.19.79 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணி வழங்கப்பட்டிருந்த நேரத்தில் நீதிமன்ற தடையுத்தரவு வந்து, கடந்த 30-4-2015 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் திரும்பப் பெறப்பட்டது. இப்பணிக்கு திருத்திய வடிவமைப்பு அலகுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. திருத்திய வடிவமைப்பின்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, விரைவில் ஒப்பந்தம் கோரப்படவுள்ளது.*

அதேபோல, பாலப் பணி 2-ஐப் பொறுத்தவரையில், சோமனூர் சாலையிலிருந்து சிக்கண்ணா கல்லூரி செல்லும் சாலை கி.மீ. 6-ல் நொய்யலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு திருப்பூர் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2006-2007-ன்கீழ் ரூ.250 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிக்கு வழங்கப்பட்டிருந்த நீதிமன்ற தடையுத்தரவு கடந்த 30-4-2015 அன்று சென்னை உயர்

நீதிமன்றத்தால் திரும்பப் பெறப்பட்டது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்படவுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் இரண்டு பாலங்களைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். அதுவும் அரசின் நடவடிக்கையில் இருந்து வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-தஞ்சை வரையுள்ள சாலையில் நீடாமங்கலத்தில் உள்ள இரயில் செல்லும் பாதையில் இரயில்வே கடவு மூடப்பட்டிருந்தால் போக்குவரத்து மிகப்பெரிய அளவில் பாதிப்படைகிறது. அதேபோல், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வருகின்றவர்களும் அரை மணியிலிருந்து ஒரு மணி நேரம் வரை காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரயில்வே கடவு மூடியிருக்கும்போது போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 24 மணி நேரத்தில் இரயில் பாதையில் செல்லும் இரயில்களின் எண்ணிக்கை, இரயில் செல்லும்போது இரயில்வே கடவு மூடப்பட்டிருக்கும் நேர்வில் இருபக்கங்களிலும் நிற்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அதற்குப் புள்ளிகள் கொடுத்து, அந்தப் புள்ளிகள் ஒரு இலட்சம் அலகுகளுக்குமேல் இருக்குமேயானால் அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் நீடாமங்கலம் இரயில்வே பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தற்போது, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்தப் பணி முடிந்தபிறகு மேற்கொண்டு இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

தொழிற்பயிற்சி நிலையம்

***36670 திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆழியாறு பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான நிலை தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி மலைப் பகுதி. தேயிலை, காபி தோட்டங்கள் நிறைந்த நகராட்சிப் பகுதியாகும். கீழ்ப் பகுதியில் 28 பஞ்சாயத்துகள் உள்ளன. இவற்றில் தென்னை விவசாயம், நெல், கரும்பு சாகுபடி செய்கிறார்கள்.*